அசல் வழக்கு எண்: 50/2021
நாள்: 03.04.2024
PW.3
பெயர்: சந்திரசேகரன்
த/பெ :பழனிச்சாமி
வயது : 43
ஊர் : சீத்தப்பட்டி. இலுப்பூர்
தொழில்: மளிகை கடை வைத்துள்ளேன்

<u>**முதல் விசாரணை**</u>

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப்பட்டதன் பேரில் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 7, 8 வருடங்களுக்கு முன்பு நான் விராலிமலையில் உள்ள ஈஸ்வரி மளிகைக்கடைக்கு ஜாமான் வாங்குவதற்காக வந்தபோது, நான் வாங்கிய ஜாமான்களை எனது வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு நபர் கையில் பை வைத்துக்கொண்டு, அவர் பெயர் எனக்குத் தெரியவில்லை. அவர் என்னிடம் இலுப்பூர் செல்வதாகவும், அவர் நடக்க முடியாததால், என்னுடைய ஆம்னி வேனில் என்னை அழைத்து கொண்டு விடுமாறு என்னிடம் கேட்டார். நான் ஜாமான்களை வைத்துள்ளதால், முடியாது என்று சொன்னேன். அவர் கெஞ்சியதால், நான் அவரை வண்டியில் ஏற்றி டவுன்சிப் அருகில் இறக்கிவிட்டேன். அப்பொழுது நன்றி சொல்லிவிட்டு என்னிடம் போன் நம்பர் வாங்கினார். அவர் உதவி தேவைப்பட்டால் அழைப்பதாக சொல்லிவிட்டு, நான் ஏற்றிவந்ததற்காக என்னிடம் ரூ.200/- பணம் கொடுத்தார். பின்னிட்டு ஒரு 15 நாட்கள் கழித்து அந்த நபர் என்னை அலைபேசியில் அழைத்தார். அவருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், யாரும் உடனில்லை என்றும், என்னை உதவிக்கு வருமாறு அழைத்தார். நான் கடை வைத்துள்ளேன். வரமுடியாது என்று சொன்னேன். என் மகன் வந்துவிடுவார், வருமாறு அழைத்ததால், நான் அவரை அழைத்துக்கொண்டு மணப்பாறை தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தேன். அதன்பின்னிட்டு நான் வந்துவிட்டேன். பின்னிட்டு 10 நாட்கள் கழித்து திருவாணைக்காவல் கோவிலுக்கு நான் அழைத்துச்சென்றேன். பின்னிட்டு 10 நாட்கள் கழித்து விராலிமலை கோவிலுக்கு அழைத்துச்செல்ல சொன்னார். நானும் அழைத்துச்சென்றேன். பின்னிட்டு 15 நாட்கள் கழித்து திருச்சியில் உள்ள காவேரி மருத்துவமனையில் அவரை சிகிச்சைக்காக அழைத்துக்கொண்டு விட்டேன். அப்பொழுது அந்த அம்மாவின் மகன் என்று சொல்லி ஒரு நபர் வந்தார். அவர்களுடன் 10 பேர் இருந்தார்கள். நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அவர் வைத்திருந்த பை தொடர்பாக எனக்கு ஒருவாரம் கழித்து எனக்கு போன் செய்தார்கள். கட்டைப்பையில் இருந்த துணியை கொண்டு வந்து

கொடுக்குமாறும், மாற்றுத்துணி எதுவும் இல்லை என்றும், ஒரு வாரம் கழித்து போன் செய்ததால், அந்த பையை மருத்துவமனையில் கொண்டு போய் கொடுத்தேன். அந்த அம்மா என்னிடம் கையை பிடித்து அழுதார். எதற்காக அழுதார் என்று எனக்குத் தெரியவில்லை. அருகில் இருந்த நபர்கள் பேசிக்கொண்டு, ஒரு file ல் இருந்து உயிலை எடுத்து என் பையனுக்கு உயிலை எடுத்து வைத்துள்ளேன் என்று என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 உயிலில் உள்ள 3 வது பக்கத்தில் கீழ் சாட்சிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் இரண்டாவது சாட்சிக்கையெழுத்து உங்களுடையது தான் அந்த கையொப்பம் **(வா.சா.ஆ.10/PW3)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:–</u>**

நீங்கள் கையெழுத்து போட்ட பேப்பரில் ஏற்கனவே கையொப்பம் போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த உயிலில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். உங்களிடம் கையெழுத்து வாங்கியபோது, நாகராஜன் என்பவர் இருந்தாரா என்றால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது. நாகராஜன் யார் என்றே எனக்குத் தெரியாது.

நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரில் சொத்து விவரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தற்போது நினைவில்லை. நீங்கள் கையொப்பம் செய்தபோது, எத்தனை பெண்கள் இருந்தார்கள் என்றால் நான்கு , ஐந்து நபர்கள் இருந்தார்கள். நீங்கள் உயிலில் எந்த தேதியில் கையொப்பம் செய்தீர்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். உயிலில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் அந்த நேரத்தில் படித்துக்காண்பித்தார்கள். தற்பொழுது எனக்கு நினைவில்லை.

மகன் என்று அந்த பெண் சொன்னது அவருக்கு பிறந்த மகனா என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த பெண்ணுடன் உடன்பிறந்த நபர்கள் யார் என்று உங்களுக்கு தெரியாது என்றால் யாரும் இல்லை என்று என்னிடம் சொல்லியுள்ளார்கள். அந்த நபரை மகன் என்று எவ்வாறு கூறுகிறார் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். உடல்நிலை சரியில்லாத நபராக நீங்கள் சொல்லப்பட்ட நபர் நீங்கள் பார்க்கும்போது உயிலில் கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை. வேறு யாரும் உயிலில் உங்கள் முன்னிலையில் கையொப்பம் செய்தார்கள் என்றால் ஏற்கனவே கையொப்பங்கள் போடப்பட்டிருந்தது. உயில் ஆவணத்தில் அனைவரும் கையொப்பம் தான் போட்டிருந்தார்கள், கைரேகை யாரும் வைக்கவில்லை என்றால் சரிதான். என்று சாட்சி சாட்சியம் அளித்துவிட்டு, பின்னிட்டு சரியாக

நான் கவனிக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.

உங்களிடம் உயிலில் நாகராஜ் தனிப்பட்ட முறையில் கையொப்பம் வாங்கியதால் தான் மற்ற விவரங்கள் எதுவும் உங்களுக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை:-**

நீங்கள் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் உயிலில் உங்களை பற்றிய அடையாளங்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஊர் மட்டும் போட்டுள்ளேன். சீத்தப்பட்டி என்று பல்வேறு மாவட்டங்களில் ஊர்கள் உள்ளது என்றால் சரிதான். உங்களுடைய பெயருக்கு பக்கத்தில் எந்த மாவட்டம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையில் உள்ள கையொப்பத்திற்கும், உயிலில் உள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் ஒப்பிட்டு பார்த்தால் தெரியும் என்றால் சரிதான்.உயிலில் உள்ள கையொப்பம் உங்களுடையது இல்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| sd//- சந்திரசேகரன்<br>PW3. | //sd//- திரு.S.அன்புதாசன்,B.com., B.L.,<br>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், இலுப்பூர் (மு.கூ.பொ). |